# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

**சாகர் பந்து நடவடிக்கை - டித்வா புயலை அடுத்து இலங்கைக்கு உடனடி மனிதாபிமான நிவாரணத்தை வழங்கிய இந்தியா**

இலங்கை கரையில் உருவாகிய ஆழமான காற்றழுத்த தாழ்விலிருந்து தீவிரமடைந்து 2025 நவம்பர் 27 ஆம் திகதி கரையை அடைந்த டித்வா சூறாவளியை தொடர்ந்து இலங்கையின் பல்வேறு மாவட்டங்களிலும் வெள்ளப்பெருக்கு, மண்சரிவு மற்றும் அத்தியாவசிய சேவைகளுக்கான இடையூறு ஏற்பட்டிருப்பதாக அறிய முடிகின்றது. இந்த புயல்காரணமாக கிழக்கு மத்திய மற்றும் நாடு முழுவதும் உள்ள பல்வேறு பிராந்தியங்களிலும் மிக மோசமான காற்று மற்றும் கடும் மழை காரணமாக வீடுகள் வாழ்வாதாரங்கள் மற்றும் முக்கிய உட்கட்டமைப்பு வசதிகளுக்கு பரவலான சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

2. இதன் காரணமாக தோன்றியுள்ள மனிதாபிமான தேவைகளுக்கு உடனடியாக பதிலளிக்கும் முகமாக பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவும் வகையில் மனிதாபிமான உதவி மற்றும் அனர்த்த நிவாரண முயற்சிகள் **(HADR)** இந்திய அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதன் அடிப்படையில் சாகர் பந்து நடவடிக்கை தற்போது அமுலில் உள்ளது. இதுவரை வழங்கப்பட்ட உதவிகளில் 4.5 தொன்கள் உலர் நிவாரணம் மற்றும் 2 தொன் உடனடி உணவுப் பொருட்கள், பொதி செய்யப்பட்ட உணவுப் பொருட்கள், உண்பதற்கு தயார் நிலையில் உள்ள பொதி செய்யப்பட்ட உணவுப் பொருட்கள், பால் மற்றும் பேக்கரி உற்பத்தி பொருட்கள், குடிபானங்கள் மற்றும் ஏனைய அத்தியாவசிய போசாக்கு உணவு வகைகள் உள்ளிட்டவை உடனடி வீட்டு தேவைகளை நிவர்த்தி செய்யும் வகையில் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. அதற்கு மேலதிகமாக உயிர்காக்கும் அத்தியாவசிய உதவிப் பொருட்களும் வழங்கி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இப்பொருட்கள் அனைத்தும் தற்போது இலங்கையில் தரித்து நிற்கும் இந்திய கடற்படை கப்பல்களான ஐஎன்எஸ் விக்ராந்த் மற்றும் ஐஎன்எஸ் உதய்கிரி ஆகியவற்றின் மூலமாக வழங்கப்பட்டன.

3. சவால்கள் நிறைந்த இத்தருணத்தில் இலங்கை மக்களுடன் இந்தியா தனது கூட்டொருமைப்பாட்டினை வெளிப்படுத்தி உறுதுணையாக நிற்கின்றது. அயலுறவுக்கு முதலிடம் கொள்கை மீதான தனது உறுதியான அர்ப்பணிப்பினால் வழிநடத்தப்படும் இந்தியா, இந்த நெருக்கடி மிகுந்த நேரத்தில் இலங்கைக்கு ஆதரவு வழங்குவதற்கு தன்னை முற்றிலும் அர்ப்பணித்துள்ளது. தொடர்ந்து, நிலவரத்துக்கு ஏற்ற வகையில் இலங்கை

அரசாங்கத்தின் அதிகாரிகளின் ஆலோசனை அடிப்படையில் மேலதிக உதவிகள் வழங்கப்படும்.

4. இந்த இயற்கை பேரிடரை எதிர்கொண்டு துரிதமாக மீட்சி பெறுவதற்கு இலங்கைக்கு அசைக்க முடியாத ஆதரவு வழங்கப்படும் என இந்தியா மீண்டும் உறுதி அளிக்கின்றது.

*********

**கொழும்பு,**
**28 நவம்பர் 2025**